தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பூமியில் 11.7 கோடி ஏரிகள்

பூமியில் உள்ள ஏரிகளின் எண்ணிக்கை 11.7 கோடி என ஸ்வீடனைச் சேர்ந்த பல்கலைக்கழகம் நடத்திய ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது.

ஸ்வீடனின் உமேயா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சுற்றுச்சூழலியல் விஞ்ஞானி டேவிட் ஸீகெல், உலகிலுள்ள ஏரிகளின் எண்ணிக்கை குறித்து வேறு சில ஆராய்ச்சியாளர்களுடன் நடத்திய ஆய்வு முடிவுகள் ஜியோஃபிஸிகல் ரிஸர்ச் லெட்டர்ஸ் எனும் புவியியல் ஆய்வேட்டில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் தெரிவித்துள்ள விவரம்: உலகிலுள்ள ஏரிகளில் பெரும்பாலானவை, பூமியின் வட பகுதியில் உள்ளன. தென் பகுதியில் நிலப்பகுதி குறைவென்பதால் ஏரிகளின் எண்ணிக்கையும் குறைவாக இருக்கிறது. பூமியில் உள்ள ஏரிகளின் எண்ணிக்கை 11.7 கோடி எனத் தெரிய வந்துள்ளது. அனைத்து ஏரிகளின் மொத்த பரப்பளவு 50 லட்சம் சதுர கிலோ மீட்டராகும். இவை பூமியில் 3.7 சதவீத இடத்தைப் பிடித்துள்ளன. ஒன்பது கோடி ஏரிகள் அரை ஏக்கர் முதல் இரண்டரை ஏக்கர் வரை பரப்புள்ளவை. செயற்கைக்கோள் மூலமாகப் பெறப்பட்ட படங்களை சூப்பர் கம்ப்யூட்டர்கள் கொண்டு ஆய்வு செய்து இந்த விவரங்கள் பெறப்பட்டுள்ளன. இந்த ஆய்வில், அன்டார்டிகா, கிரீன்லேண்ட் ஆகிய பகுதிகள் உள்படுத்தப்படவில்லை. உலகின் மிகப் பெரிய ஏரி எனக் கருதக் கூடிய காஸ்பியன் கடல் இந்த ஆய்வில் குறிப்பிடப்படவில்லை. காஸ்பியன் கடலின் பரப்பு 3,71,000 சதுர கிலோ மீட்டராகும்.

**<u>ராஜபாளையம் வனப்பகுதியில் மழை: நீர்தேக்கத்துக்கு தண்ணீர் வரத்து</u>**

ராஜபாளையத்துக்கு மேற்கே வனப்பகுதியில் பெய்த பரவலான மழையால் ஆறாவது மைல் குடிநீர் தேக்கத்திற்கு தண்ணீர் வரத்து துவங்கியுள்ளது.

ராஜபாளையம் மற்றும் சுற்றுப்பகுதியில் கடந்த சில மாதங்களாகவே குறைந்த பட்ச அளவு மழை கூட பெய்யவில்லை. ஆடி,ஆவணி மாதங்களிலும் வெயில் வாட்டி எடுத்தது. இதனால் கடுமையான குடிநீர் தட்டுப்பாடும் நிலவியது. ராஜபாளையம் நகர் பகுதியில் 25 நாள் முதல் 30 நாள்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. இந்நிலையில் கடந்த 4-ஆம் தேதி இரவு ராஜபாளையம் நகர் பகுதியில் சுமார் ஒருமணி நேரம் இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது. மேற்குத்தொடர்ச்சி மலை வனப்பகுதியிலும் நல்லமழை பெய்தது. திங்கள்கிழமை மாலையும் பரவலாக மழை பெய்தது. இதனால் ராஜபாளையம் அய்யனார்கோவில் வனப்பகுதி ஆறு மற்றும் மலட்டாற்றில் தண்ணீர் வரத்துவங்கியது. இந்த தண்ணீர் ஆறாவது மைல் குடிநீர் தேக்கத்திற்கு வரத்துவங்கியது. நீர்த்தேக்கத்தில் தண்ணீர் இல்லாமல் பல மாதமாக வறண்டுபோய் இருந்ததால் நீர்தேக்கத்திற்கு வந்த தண்ணீர் பூமிக்குள் சென்றது. தொடர்ந்து தண்ணீர் வந்ததால் திங்கள்கிழமை முதல் நீர் தேக்கத்தில் தண்ணீர் தேங்கத் துவங்கியது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். விடுமுறை தினம் என்பதால் ஆற்றில் தண்ணீர் வருவதை பார்க்க ஏராளமானவர்கள் அய்யனார்கோவில் வனப்பகுதிக்குச் சென்றனர். இப்பகுதியில் வனத்துறையினர், காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

**<u>கிருஷ்ணகிரியில் காற்றுடன் பலத்த மழை</u>**

கிருஷ்ணகிரியில் செவ்வாய்க்கிழமை காற்று, இடியுடன் பலத்த மழை பெய்தது. கிருஷ்ணகிரியில் கடந்த சில நாள்களாக பகலில் வெயிலின்

தாக்கம் அதிகமாக இருந்து வந்தது. இதனால், மக்கள் பெரும் அவதியுற்றனர். இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை இடி, காற்றுடன் பலத்த மழை பெய்தது. சாலையில் மழைநீர் வெள்ளம்போல பெருக்கெடுத்து ஓடியது. வட்டச் சாலை அருகே கடைகளில் வைக்கப்பட்டிருந்த பெரிய பேனர்கள் பலத்த காற்றால் மின் கம்பியில் சாய்ந்தன. இதனால், கிருஷ்ணகிரியில் 2 மணி நேரத்துக்கு மேலாக மின்சார விநியோகம் தடைபட்டது. கிருஷ்ணகிரி, பர்கூர், காவேரிப்பட்டணம் உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக பலத்த மழை பெய்தது.

## <u>சேலம் மாவட்டத்தில் பரவலாக மழை</u>

சேலம் மாநகரம், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை பரவலாக மழை பெய்தது. சேலம் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இந்த மழை காரணமாக ஏரிகள், கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு மாநகரின் பல்வேறு பகுதிகளில் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக பலத்த மழை பெய்தது. இதேபோல வாழப்பாடி, ஆத்தூர், சங்ககிரி, மேட்டூர், எடப்பாடி உள்ளிட்ட பகுதிகளிலும் மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழை வெள்ளம் தேங்கியுள்ளது. மேலும், சில இடங்களில் மின்சாரம் தடைபட்டது. சேலம் மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): சேலம் - 15.4, ஏற்காடு - 6, வாழப்பாடி - 30, ஆத்தூர் - 21.6, தம்மம்பட்டி - 7.4, சங்ககிரி - 98, எடப்பாடி - 62, மேட்டூர் - 46.4, ஓமலூர் - 43.6. இதைத் தொடர்ந்து, சேலம் மாநகரில் திங்கள்கிழமையும் பகலில் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. சங்ககிரியில் ஞாயிற்றுக்கிழமை இரவு இடி - மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால், சங்ககிரியிலிருந்து எடப்பாடி செல்லும் சாலையில்

உள்ள பால்வாய் பகுதியில் தோண்டப்பட்ட நிலையில் குழிகளில் மழை நீர் தேங்கி நின்றது. இதனால் அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் அவதியடைந்தனர். எனவே, பேரூராட்சி நிர்வாகத்தினர் குளத்தை தூர்வாரி, சாலையை அகலப்படுத்தும் பணியை விரைந்து முடிக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

## <u>72 மணி நேரத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்பு: வானிலை ஆய்வுமையம்</u>

அடுத்த 72 மணி நேரத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று பெங்களூரு வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. இது குறித்து பெங்களூரு வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: கடந்த 24 மணி நேரத்தில் கர்நாடகத்தில் தென்மேற்கு பருவமழை மிகவும்பலவீனமாக காணப்பட்டது. எனினும், கர்நாடகத்தின் ஒருசில பகுதிகளில் மழை பெய்தது. இந்த சமயத்தில் பெல்காம் மாவட்டத்தின் லோன்டா, கதக் மாவட்டத்தின் ஷிரஹட்டியில் தலா 400 மிமீ, யாதகிரி மாவட்டத்தின் சைதாபூரில் 300 மிமீ, ராய்ச்சூர் மாவட்டத்தின் தியோதுர்க், மண்டியா மாவட்டத்தின் பாண்டபுரத்தில் தலா 100 மிமீ மழை பதிவாகியிருந்தது. குல்பர்காவில் அதிகப்பட்சமாக 36.1 டிகிரி செல்சியஸ், குறைந்தப்பட்சமாக பெல்காமில் 19.6 டிகிரி செல்சியஸ் தட்பவெப்பம் நிலவியது. வானிலை முன்னறிவிப்பு: அடுத்த 72 மணி நேரத்தில் கடலோரகர்நாடகம், தென்கர்நாடகம் மற்றும் வடகர்நாடகத்தின் உள்பகுதிகளில் பரவலாக மழை பெய்யும் வாய்ப்புள்ளது. இந்த காலக்கட்டத்தில் கடலோரகர்நாடகம் மற்றும்தென்கர்நாடகத்தின் உள்பகுதிகளின் அனைத்து மாவட்டங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வடகர்நாடகத்தின் உள்பகுதியில் ஒருசில இடங்களில் மட்டும் மழை பெய்யும் வாய்ப்புள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில் பெங்களூருவில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில இடங்களில் மட்டும் இடியுடன் கூடிய மழைபெய்யக்

கூடும். கடந்த அக்.1-ஆம் தேதி முதல் பெங்களூருவில் 4 மிமீ மழை மட்டுமே பெய்துள்ளது. இது வழக்கத்தைவிட 41 மிமீ குறைவாகும். இந்த சமயத்தில் பெங்களூருவின் தட்பவெப்பம் அதிகபட்சமாக 31 டிகிரி செல்சியசாகவும், குறைந்தபட்சமாக 19 டிகிரி செல்சியசாகவும் காணப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு**

சென்னை: வடக்கு அந்தமான் பகுதியில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களில், அடுத்த 24 மணி நேரத்தில் மழை பெய்யும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**தண்டுப்பகுதியில் குலை தள்ளிய அதிசய வாழை**

எண்ணூர்:எண்ணூாரில், தண்டு பகுதியில் குலை தள்ளிய அதிசய வாழையை பார்த்து பகுதிவாசிகள் வியப்படைந்தனர்.எண்ணூார், அன்னை சிவகாமி நகர், 10வது தெருவை சேர்ந்தவர், மரியம்மாள், 35, அவர், வீட்டின் பின்புறத்தில் வாழை கன்றை ஐந்து மாதங்களுக்கு முன் நட்டார்.அது நன்றாக வளர்ந்து, குலை தள்ளியது. இந்த நிலையில், வாழைமரத்தின் தண்டை பிளந்து, புதிதாக குலை தள்ளியது. அதை பார்த்த பகுதிவாசிகள் வியப்படைந்தனர். அதிசய வாழையை தினமும் ஏராளமானோர் வந்து பார்த்து செல்கின்றனர்.

**<u>பால் விலை உயர்வு எதிரொலி டீ, காபி விலை உயர்வு</u>**

காஞ்சிபுரம்: தனியார் பால் விலை உயர்த்தப்பட்டதன் எதிரொலியாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில், டீ மற்றும் காபி விலை, இரண்டு ரூபாய் வரை உயர்ந்துள்ளது. தமிழகத்தில் பால் கொள்முதல் விலை உயர்வு, மூலப்பொருட் களின் விலை உயர்வு போன்றவற்றை காரணம் காட்டி, தனியார் பால் நிறுவனங்கள், லிட்டருக்கு இரண்டு ரூபாயை, 6ம் தேதி முதல் உயர்த்தப்படுவதாக, பால் நிறுவனங்கள் அறிவித்தன.அந்த வகையில், நேற்று முதல், தனியார் பால் லிட்டருக்கு, இரண்டு ரூபாய் விலை உயர்த்தப்படுவது அமலுக்கு வந்தது. இந்த விலை உயர்வு, பல்வேறு தரப்பினரிடையே கடும் எதிர்ப்பு கிளப்பியுள்ளது.இருந்தபோதும், பால் விலை இரண்டு ரூபாய் உயர்த்தப்பட்டதால், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள டீக்கடைகளில், டீ மற்றும் காபி விலை உயர்த்தப்பட்டு உள்ளது.ஏழு ரூபாயாக விற்கப்பட்ட, டீ தற்போது எட்டு அல்லது ஒன்பது ரூபாய் விற்கப்படுகிறது. இதேபோல், எட்டு ரூபாய்க்கு விற்கப்பட்ட காபி, 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பால் விலை ஏற்றப்பட்ட அன்றே, டீக்கடைகளில், டீ மற்றும் காபி விலை உயர்த்தப்பட்டுள்ளதால், அனைத்து தரப்பினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

**<u>"கம்போஸ்ட்' உரங்களை பயன்படுத்த விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கல்</u>**

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தற்போது, வடகிழக்கு பருவமழை பெய்ய தொடங்கியுள்ளதால், விவசாயிகள், இயற்கை உரமான கம்போஸ்ட் உரங்களை பயன்படுத்தி, அதிக விளைச்சலை பெறலாம்' என, வேளாண் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இரண்டு லட்சம் ஹெக்டேரில், நெல், பயிறு வகைகள், சிறுதானியங்கள்,

எண்ணெய் வித்து பயிர்கள், மலர்கள், காய்கறிகள், பழங்கள் ஆகியவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகளுக்கு இடுபொருட்களான விதைகள், யூரியா, டி.ஏ.பி., சூர்ப்பர் பாஸ்பேட் மற்றும் கலப்பு உரங்கள் வழங்கப்பட்டு வரும் நிலையில், தற்போது, மாவட்டத்தில் பருவமழை பெய்ய தொடங்கியுள்ளதால், விவசாயிகள், இயற்கை உரங்களான கம்போஸ்ட் உரங்களை பயன்படுத்த வேண்டும் என்று, வேளாண் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். இது குறித்து, வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) பச்சையப்பன் கூறியதாவது: கம்போஸ்ட் என்பது, மக்கிய தாவர அல்லது விலங்குகளிடம் இருந்த பெறப்படும் கறுமை நிற உரமாகும். மேலும், இவ்வகை உரம், சர்க்கரை ஆலை கழிவான மொலாசஸ் மூலமாகவும், நிலக்கரி சுரங்க கழிவுகளில் இருந்தும் தயாரிக்கப்படுகிறது.

இந்த உரத்தை, மண்ணில் இடும்போது, மண்ணின் தன்மை சீர்படுவதோடு மிக முக்கிய சத்துகள், பயிர்களுக்கு எடுத்துக் கொடுக்கப்படுகிறது. இந்த உரத்தை நடவுக்கு முன்னாலும், நடவுக்கு பின்பும் வயல்களில் இடலாம்.

அனைத்து வகை பயிர்களுக்கும், மலைப்பயிர்கள் பழவகை பயிர்கள், காய்கறிகளுக்கும் மற்றும் மரவகைகளுக்கும், கம்போஸ்ட் உரங்களை அவசியம் இட வேண்டும். கடந்த, 30 ஆண்டுகளாக ரசாயன உரங்களின் பயன்பாடு அதிகரித்து வருவதால், மண்ணில், அங்கக தண்மை குறைந்து, மிகவும், உயிரற்ற மண் ஆகி வருவதால் அங்கக தண்மையை அதிகப்படுத்த, கம்போஸ்ட் உரங்களை இடவேண்டும். கம்போஸ்ட் உரங்களை இடும்போது, மண்ணின் காற்றோட்ட வசதி கூடுகிறது. மண்ணின் அங்கக தன்மை உயர்வதால், மண்ணின் ஈரப்பதம், நீர்நிலை நிறுத்தும் தன்மை, மண்வளம் ஆகியவை அதிகரிக்கிறது. மேலும், உயிர் உரங்களாகிய அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியாக்களின் வளர்ச்சி அதிகரிக்கிறது. மண்ணின் வெப்ப நிலை, அமில தன்மை ஆகியவை, சீராக

வைக்க உதவுகிறது. மண்ணின் ரசாயன உரங்களை, எளிதில் பயிருக்கு எடுத்துக் கொடுகிறது. எனவே, விவசாயிகள், அனைத்து வகை பயிர்களுக்கும், இயற்கை உரமான கம்போஸ்ட் உரத்தை இட்டு, விளைச்சல் பெருக்கி, அதிக லாபம் பெறலாம். இவ்வாறு கூறினார்.

**<u>மின்னலுடன் கூடிய கனமழை</u>**

ஈரோடு: பல மணி நேரம், மின்னல், இடியுடன் கூடிய கன மழை பெய்ததால், ஈரோடு குளிர்ந்தது. மழை பாதிப்புகள் ஏதுமில்லாதது, நிம்மதியை ஏற்படுத்தி உள்ளது. ஈரோடு மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு, இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக, மின்னல், இடியுடன், மழை பெய்தது. இரவு, 9.30 மணிக்கு திடீரென பலத்த காற்று வீசியது. பின்னர் மழை பெய்ய துவங்கியது. இரண்டு மணி நேரத்துக்கும் மேல் கனமழை பெய்தது. ஈரோட்டில் அதிகபட்சமாக, 25 மி.மீ., மழையளவு பதிவானது. மாவட்டத்தின் பிற பகுதிகளில், பவானிசாகர், 10.2, ஒரத்துப்பாளையம் அணை, 54, சத்தியமங்கலம், 16, கோபி மற்றும் கொடிவேரி, 17, எலந்தகுட்டைமேடு, 18, கவுந்தப்பாடி, 18.4, பெருந்துறை, 10, பவானி, 18.2, புங்கம்பாடி, 16.6, மொடக்குறிச்சி, 14, சிவகிரி, 16, சென்னிமலை, 15, சக்தி நகர், 12, பவானி, 14, சித்தார், 15, அந்தியூர், வெள்ளித்திருப்பூர், 9, அத்தாணி, 19, புதுக்கரைப்புதூர், 33, கவுந்தப்பாடி, 12, காஞ்சிக்கோவில், 20, அம்மாபேட்டை, 21, சந்தைபேட்டை, 19, குருவரெட்டியூர், 10, டி.என்.பாளையம், 18, டி.ஜி.புதூர், 16, கள்ளிப்பட்டி, 13, காசிபாளையம், 14 மி.மீட்டர் மழை பதிவானது. நள்ளிரவில் பெய்த மழையால், ஈரோட்டில் நேற்று காலை, சில மணி நேரம் வரை குளிர்ந்த சூழல் காணப்பட்டது.

நிலத்தடி நீர் மட்டம் உயர, இம்மழை ஏதுவாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. சில தினங்களாக தொடரும் மழை, விவசாயம், கால்நடை வளர்ப்புக்கு உகந்ததாக இருக்கும் என்று, விவசாயிகள் கருத்து தெரிவித்துள்ளனர். இடி, மின்னல், பலத்த காற்று, மழையால் பாதிப்பும் ஏதும் ஏற்படவில்லை.

**<u>மீண்டும் வைக்கோல் விற்பனை : கால்நடை துறை முயற்சி</u>**

கம்பம்: தேனி மாவட்டத்தில் மீண்டும் மானிய விலையில் வைக்கோல் விற்பனையை துவக்க கால்நடை துறையினர் முயற்சி செய்து வருகின்றனர்.

கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், அரசு மானிய விலையில் மாடுகளுக்கு வைக்கோல் விற்கும் திட்டத்தை கடந்த மார்ச்சில் துவக்கியது.கடந்த சில ஆண்டுகளாக பருவமழை எதிர்பார்த்த அளவு இல்லை. கம்பம் பள்ளத்தாக்கில் இருபோக நெல் சாகுபடியில் ஒரு போகம் மட்டுமே எடுக்கப்பட்டது. ஒரு போக விவசாயத்திலும் கிடைத்த வைக்கோலை, கேரள வியாபாரிகள் கூடுதல் விலை கொடுத்து வாங்கி சென்றுவிட்டனர். எனவே கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு உருவானது.கோடையில் விவசாயிகளின் இக்கட்டான நிலையை சமாளிக்க அரசே கால்நடைகள் வைத்திருப்போருக்கு வைக்கோல் மானிய விலையில் விற்கும் திட்டத்தை அறிமுகம் செய்தது. உத்தமபாளையம் கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் ஜெகதீசன் கூறுகையில், 5 மாடு களுக்கு 105 கிலோ வழங்கப்பட்டது.கிலோ ஒன்றின் விலை 2 ரூபாய்க்கு விற்பனை செய்தோம். உத்தமபாளையம், கம்பம், பெரியகுளம், ஆண்டிபட்டி ஆகிய இடங்களில் வைக்கோல் விற்பனை மேற்கொள்ளப் பட்டது.ஒரு "பிளாக்'10 லட்சம் ரூபாய் தரப்பட்டது. விவசாயிகள் ஆர்வத்துடன் வைக்கோல் வாங்கி சென்றனர். தற்போது அந்த திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட நிதி முழுவதும் செலவாகிவிட்டது.ஆனால் விவசாயிகள்

தொடர்ந்து வைக்கோல் கேட்டு வருகின்றனர். இந்த திட்டத்தில் நிதியை செலவழிக்காத மாவட்டங்களில் இருந்து,தேனி மாவட்டத்திற்கு மாற்றிதந்து அனுமதிக்க அரசை கேட்டுள்ளோம்'' என்றார்.

**சூடான விற்பனையில் சூடை மீன்கள்**

கீழக்கரை: திருப்புல்லாணி அருகே உள்ள களிமண்குண்டு கடற்கரை பகுதியில் 150 க்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகள் உள்ளன. பிடிபடும் மீன்களை மீனவர்களின் குடும்பத்திலுள்ளோர் விற்பனை செய்து வருகின்றனர். இரவு வைக்கப்படும் வலைகளில் சிக்கும் மீன்களை காலை 7 முதல் 9 மணிக்குள்ளாக வாங்குவதற்கென்று சில்லறை வியாபாரிகள், பொதுமக்கள் கூட்டம் கடற்கரையில் காணப்படுகிறது. மீனவர் பாண்டி கூறுகையில், ""நெடிமீன் சூடை, மட்ட சூடை மீன்களை சிறிய வாளிகளில் நிரப்பினால் 4 கிலோ இருக்கும். ஒரு கிலோ 25 வீதம் ஒரு வாளி மீன்கள் ரூ.100 க்கு விற்கப்படுகிறது. தற்போது சூடை மீன்களின் வரத்து அதிகமாக உள்ளதால் ஏலம் எடுத்து மொத்தவியாபாரிகள் இங்கிருந்து வெளியூர்களுக்கு கொண்டு செல்கின்றனர்,'' என்றார்.

**வறண்ட பூமியில் மக்காச்சோளம்**

விருதுநகர் : தற்போதைய மழையை தொடர்ந்து விருதுநகர் அருகே மானவாரி நிலத்தில் மக்காச் சோள பயிர் விவசாயத்தில், விவசாயிகள் ஈடுப்பட்டுள்ள னர். இதை தொடர்ந்து இங்கு சிட்டுக்குருவிகளின் கூட்டம் அதிகமாக காணப்படுவதால் பார்ப்பவர்கள் கண்களுக்கு விருந்தாக உள்ளது. விருதுநகர் அழாகாபுரி ரோட்டில் நடையனேரி, எரிச்ச நத்தம் பகுதியில் 300 ஏக்கர் பரப்பளவில் மக்காச் சோளம் பயிரிடப்பட்டுள்ளது. கரிசல் மண் பூமியான இந்த வறண்ட நிலத்தில் கடந்த 10 ஆண்டுகளாக விவசாயிகள் மக்காச்சோள பயிரிட்டு வருகின்றனர். கடந்த ஜூலையில் நடவு செய்யப்பட்ட இந்த பயிர் தற்போது வளர்ந்து பச்சை பசேல் என பார்ப்பவர் மனங்களை கொள்ளை கொள்கிறது. ஒரு ஏக்கருக்கு உழவு, களை,

உரமிடுதல் என ரூ. 15 ஆயிரம் வரை செலவு செய்துள்ளனர். தற்போது மக்காச்சோள பயிரில் களை எடுக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அழிந்து வரும் சிட்டுக் குருவிகள், இங்குள்ள தானிய பயிர், புழு, பூச்சிகளை உணவாக உட்கொள்ள ஆங்காங்கு மின்சார வயர், மரங்களில் உட்கார்ந்திருப்பது பார்ப்பவர்கள் கண்களுக்கு விருந்தாக உள்ளது. நடையனேரி விவசாயி பிச்சை கூறுகையில், ""வறண்ட பூமியில் மக்காச்சோளம் நடவு செய்தால் அதிக மகசூல் கிடைக்கும் என பெரும்பாலான விவசாயிகள், இதையே நடவு செய்துள்ளனர். அக்டோபர்,நவம்பரிலும் மழை பெய்தால் ஓரளவு நல்ல மகசூல் கிடைக்கும். வேளாண் துறை அதிகாரிகள், பயிர்களை பார்வையிட்டு எந்த வகையான உரங்களை இட வேண்டும் என அறிவுறுத்தினால், விவசாயிகளுக்கு மேலும் பயனுள்ளதாக அமையும் ,'' என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வட கிழக்கு பருவமழை 20ம் தேதி தொடங்கும்?**



சென்னை: தமிழகத்துக்கு அதிக மழையை கொடுக்கும் வட கிழக்கு பருவமழை 20ம் தேதி தொடங்குவதற்கான சூழல் உருவாகியுள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் ஆண்டுதோறும் அக்டோபர்- டிசம்பர் மாதங்களில் ஆந்திரா மற்றும் தமிழகம், புதுச்சேரி, ராயலசீமா ஆகிய இடங்களில் வட கிழக்கு பருவமழை பெய்கிறது. வட கிழக்கு பருவமழை காலத்தில் தமிழக கடலோர மாவட்டங்களில் 60 சதவீத மழையும், உள் மாவட்டங்களில் 40 முதல் 50 சதவீத மழை பெய்கிறது. ஒவ்வொரு ஆண்டும் வட கிழக்கு பருவமழை அக்டோபர் மாதத்தில் 20ம் தேதியில்தான் தொடங்கும். சில நேரங்களில் அக்டோபர் மாத தொடக்கத்திலேயே மழை பெய்யத் தொடங்கிவிடும். கடந்த ஆண்டைப் பொறுத்தவரையில் அக்டோபர் 21ம் தேதி தொடங்கியது. அப்போது வங்கக் கடலில் 8 புயல்கள் ஏற்பட்டன. அக்டோபர் 8ம் தேதி பாய்லின் புயலும், நவம்பர் 19ம் தேதி ஹெலன்புயலும், நவம்பர் 23ம் தேதி லெஹர் புயலும், டிசம்பர் 6ம் தேதி மாதி புயலும் வங்கக் கடலில் ஏற்பட்ட வலுவான புயல்கள் இவற்றின் மூலம் தமிழகத்துக்கு நல்ல மழையை கொடுத்தது. இருப்பினும் கடந்த ஆண்டில் வட கிழக்கு பருவமழையின் மூலம் இயல்பாக பெய்ய வேண்டிய மழை 33 சதவீதம் குறைவாகவே பெய்தது. சென்னையில், இயல்பாக 789.9 மிமீ பெய்ய வேண்டிய மழை 463.5 மிமீ அளவுக்கு பெய்தது. இந்த ஆண்டில் கடந்த ஜூன் மாதம் தொடங்கிய தென் மேற்கு பருவமழை மூலம் தமிழகத்தில் பரவலாக மழை பெய்தாலும், தமிழகத்தின் வெப்பத்தை குறைக்கவில்லை. தொடர்ந்து நிலவும் வெயில் காரணமாக தமிழகத்தில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நேற்று ஏற்பட்ட வெப்ப சலனம் காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக திருச்செங்கோடு, சங்ககிரி ஆகிய இடங்களில் 100 மிமீ மழை பெய்துள்ளது.

தர்மபுரி 90 மிமீ, பாப்பிரெட்டிப்பட்டி, தளி, தேவாலா, சேந்தமங்கலம் 70 மிமீ, ராசிபுரம், கொடுமுடி 60 மிமீ, பென்னாகரம், மேட்டூர் 50 மிமீ, ஓமலூர், தேன்கனிக்கோட்டை, சத்திரப்பட்டி, குமாரபாளை யம் 40ம மீ, போடி நாயக்கனூர், பரமத்திவேலூர், வாழப்பாடி, அவினாசி, ஈரோடு 30 மிமீ மழை பெய்துள்ளது. சென்னையில் புறநகரில் ஒரு சில இடங்களிலும், காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களிலும் நேற்று மழை பெய்தது. இதையடுத்து இன்று தமிழகத்தில் பல இடங்களில் கன மழை பெய்வதற்கான வாய்ப்புள்ளது. சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். ஒரு சில இடங்களில் மாலை இரவு நேரங்களில் இடியுடன் மழை பெய்யும்.

**முட்டை விலை 2 காசுகள் உயர்வு**




நாமக்கல்: முட்டை விலை 2 காசு உயர்ந்துள்ளது.நாமக்கல்லில் நேற்று நடைபெற்ற தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டத்தில், முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 310 காசில் இருந்து 2 காசு உயர்த்தப்பட்டு 312 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை உயர்ந்து வருவதால், நாமக்கல் மண்டலத்திலும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.63, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.85 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மற்ற மண்டலங்களில் நேற்று நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை விலை விபரம் (காசுகளில்): சென்னை 350,

பெங்களூரு 335, மைசூர் 335, ஐதராபாத் 330, மும்பை 370, விஜயவாடா 315, டெல்லி 355, பர்வாலா 330 காசுகள்.

**விவசாயத்தில் விளைச்சலை பெருக்க பண்ணை மகளிர் திட்டம் அறிமுகம்**

கோவை,: கோவை மாவட்டத்தில் வேளாண்மையை ஊக்குவிக்கவும், குறைந்த நீரில் விளைச்சலை பெருக்கவும், தமிழக அரசு பண்ணை மகளிர் திட்டத்தை அறிவித்துள்ளது. இதற்காக கோவையில் 17 மகளிர் சுய உதவிக்குழு தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண்மை துறை அதிகாரி கூறியதாவது: கோவை மாவட்டத்தில் இப்போது மழை போதுமான அளவில் பெய்யவில்லை. இதனால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனுடன் மின்சார தட்டுப்பாடும் சேர்ந்துள்ளதால் விவசாயம் பாதிக்கும் சூழல் உருவாகியுள்ளது. தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் இந்த நிலை நீடித்து வருகிறது. இதற்கு தீர்வு காணும் வகையில் தமிழக அரசு பண்ணை மகளிர் திட்டத்தை தற்போது அறிமுகம் செய்துள்ளது. இதில் தமிழகத்தில் உள்ள 770 மகளிர் சுய உதவிக்குழு ஈடுபடுத்தப்பட்டுள்ளது.இந்த குழுக்களுக்கு பண்ணை விவசாயம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு குறைந்த பரப்பளவில் அதிக மகசூல் பெற ஆலோசனை வழங்கப்படும். இவை தவிர இக்குழுக்களுக்கு தனியாக குடில்கள் அமைத்து வேளாண்மை செய்வதற்கான வழிமுறைகளும் வழங்கப்படும். இத்திட்டத்திற்கு கோவை மாவட்டத்தில் உள்ள 50க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக்குழுக்களில் நன்றாக செயல்படும் 17 மகளிர் சுய உதவிக்குழு தேர்வு செய்யப்பட்டுள்ளது. அடுத்த மாதம் முதல் இவர்களுக்கு குடில்அமைத்து பண்ணை விவசாயம் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் குறைந்த முதலீடு, மின்சாரம், நீர் மற்றும் நிலத்தில் அதிக மகசூலை ஏற்படுத்த முடியும். இதன் மூலம் தற்போது எகிறிவரும் விலைவாசியை ஓரளவுக்கு கட்டுக்குள் கொண்டுவர இயலும் என்றார்.

**காரைக்குடி பகுதியில் பருவமழை துவக்கம்**

காரைக்குடி, : காரைக்குடி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் மழை பெய்துள்ளதால் விவசாயிகள், விவசாய பணிகளை மகிழ்ச்சியுடன் துவங்கியுள்ளனர். காரைக்குடி அருகே சாக்கோட்டை பகுதியில் நெல் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் பயிரிடப்படுகின்றன. இதில் 5500 எக்டேரில் நெல் பயிரிடப்படுகிறது. 289 கண்மாய் பாசனத்தை நம்பியே இப்பகுதிகளில் விவசாய பணிகள் நடக்கிறது. கடந்த செப்டம்பர் மாதம் மட்டும் காரைக்குடி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் 63.6 மி.மி மழை பெய்துள்ளது. அதேபோல் இம்மாதம் இதுவரை 17.2 மிமி மழை பெய்துள்ளது. இந்த ஆண்டு இதுவரை சுமார் 300 முதல் 400 மி.மி மழை பெய்து இருக்கும் என கூறப்படுகிறது. இதனால் கண்மாய் மற்றும் கிணறுகளில் ஓரளவு தண்ணீர் உள்ளது. நேரடி விதைப்பு மற்றும் கிணற்று பாசனத்தை நம்பி விவசாயபணி இப்பகுதிகளில் துவங்கப்பட்டுள்ளது. மணச்சை, பள்ளத்தூர், கொத்தமங்கலம், நேமத்தான்பட்டி, கழனிவாசல் பகுதிகளில் கிணற்று பாசனத்தை நம்பியும், மித்ராவயல், ஜெயங்கொண் டான், நாட்டுச்சேரி, பெரியகோட்டை, களத்தூர், பெரியகொட்டகுடி, உள்பட 20க்கும் மேற்பட்ட வருவாய் கிராங்களில் நேரடி விதைப்பு மூலம் விவசாய பணிகள் துவங்கியுள்ளன. தவிர பள்ளத்தூர், வேலங்குடி உள்பட பல்வேறு பகுதிகளில் சுமார் 40 எக்டேர் நிலப்பரப்பில் இருந்த சீமைகரு வேல மரங்கள் அகற்றப்பட்டு விவசாய பணிகள் துவங்க தயார் நிலையில் உள்ளது. இது குறித்து வேளாண் உதவி இயக்குநர் மணிவண்ணன் கூறுகையில், சாக்கோட்டை பகுதியை பொறுத்தவரை 70 சதவீதம் நேரடி விதைப்பு மூலம் சாகுபடி செய்யப்படுகிறது. இப் பருவத்தில் 135 நாள் வயதுடைய ஏ.டி.டி 39, கோ.ஆர் 49 ஆகிய நெல் ரகங்களை விவசாயிகள் பயிரிடலாம். நடவுக்கு பின்பு உயிர் உரமாக அசோஸ்பிரில்லம் மற்றும்

பாஸ்போபாக்டீரியா ஆகியவற்றை தெளிக்க வேண்டும். இது பவுடராகவும், திராவமாகவும் கிடைக்கிறது. நுண் உரம் ஏக்கருக்கு 5 கிலோ வீதம் மணலுடன் கலந்து போடவேண்டும். அதேபோல் ஜிங்சல்பேட் 10 கிலோ வை மணலுடன் கலந்து போட வேண்டும். மழை பெய்ய துவங்கியுள்ளதால் வரத்து கால்வாய் உள்பட அனை த்து தண்ணீர் செல்லும் வழிகளையும் சரி செய்து கண்மாயில் தண்ணீர் தேங்குவதற்கு வசதி செய்ய வேண்டும். தேக்கி வைத்து தண்ணீரை காய்ச்சலும், பாய்ச்சலுமாக சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். இப்பகுதிகளில் மானாவாரி நிலங்களாக சுமார் 3000 எக்டேர் உள்ளது இதில் சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகளை பயிரிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

## போச்சம்பள்ளியில் பூத்து குலுங்கும் உணிமுள் பூக்கள்

போச்சம்பள்ளி, : கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி பகுதியில் பருவ மழை பொய்த்து போனதால் விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகள் கவலை அடைந்து வந்தனர். இதனால் இங்கு பனை, தென்னை மரங்கள் காய்ந்து உள்ளது. காய்கறிகள் சாகுபடி செய்யும் விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் மூலம் விவசாயம் செய்து வருகின்றனர். இந்த நிலையில் கடந்த வாரம் ஓரளவிற்கு பெய்த மழை யால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஏரி, கிண றுகள் நிரம்பும் அளவிற்கு இல்லா விட்டாலும் அடிக்கும் வெயிலுக்கு இந்த மழை குளிர்ச்சியை ஏற்படுத்தியது,இதனால் சாலையோரங்களில் செடி கொடிகள் பசுமையாக காணப்படுகிறது. இதில் போச்சம்பள்ளி சுற்று வட்டார பகுதியில் சிவப்பு, வெள் ளை, போன்ற வண்ண ங்களில் உணிமுள் பூக்கள் பூத்து குலுங்குகிறது. இதனை பொதுமக்கள் கண்டுகளித்து பறித்து செல்கின்றனர்.

**உள்ளூர் வரத்து இருந்தும் சின்ன வெங்காயம் விலை குறையவில்லை**

திண்டுக்கல், : உள்ளூர் வரத்து வந்தபோதிலும் சின்ன வெங்காயம் விலை குறையவில்லை. திண்டுக்கல் சொசைட்டி தெருவில் வெங்காய மார்க்கெட் நடைபெற்று வருகிறது. திண்டுக்கல்லைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங் களிலிருந்து சாகுபடி செய்யப்பட்ட வெங்காயம் இங்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. வாரத்தில் 3 நாட்கள் மார்க்கெட் நடைபெறும். இங்கிருந்து சென்னை, சிங்கப்பூர், மலேசியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. நேற்று மார்க்கெட்டிற்கு உள்ளூர் வெங்காயம் வரத்து அதிகமாக இருந்தது. அய்யலூர், வையம்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதியிலிருந்து சுமார் 2 ஆயிரம் மூடை வந்தது. திருச்சி, துறையூர், தேனி உள்ளிட்ட வெளி மாவட்டங்களிலிருந்து சுமார் 1000 மூடை வரத்து வந்துள்ளது. இருப்பினும் விலை கிலோ ரூ.30 வரை விற்கப்பட்டு வருகிறது. கடந்த மாதம் 2 ஆயிரம் மூடை வரத்து இருந்தது.

**அரசாணிக்காய் வரத்து அதிகரிப்பு கிலோ ரூ.14க்கு விற்பனை**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு அரசாணிக்காய் வரத்து அதிகரிப்பால் விலை குறைந்துள்ளது. ஒரு கிலோ ரூ.14க்கு விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர். பொள்ளாச்சி சுற்றுவட்டார கிராமங்களில் தென்னைக்குஅடுத்தபடியாக தக்காளி, வெண்டை, சோளம், நிலக்கடலை, பூசணி, அரசாணிக்காய், தட்டைப்பயிர், பச்சைமிளகாய் உள்ளிட்ட பல காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன. இதில் கிராமங்களில் பூசணி மற்றும் அரசாணிக்காய் விதைப்பில் விவசாயிகள் அதிகம் ஆர்வம் கட்டுகின்றனர். வடக்கிபாளையம், நெகமம், கோமங்கலம், கோட்டூர், சமத்தூர், ராமபட்டினம், கிணத்துக்கடவு, கோபாலபுரம், சூலக்கல்,

கோவில்பாளையம் உள்ளிட்ட சுற்றுவட்டார கிராம பகுதிகளில் அரசாணிக்காய் ஆகியவை தற்போது அதிகளவு விதைக்கப்பட்டுள்ளது. விளைச்சல் அதிகரித்தவுடன், அதனை அறுவடை செய்து, மார்க்கெட்டுக்கு மொத்த விற்பனைக்கு கொண்டு வரப்படும். இதனிடையே, கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு தென்மேற்கு பருவமழையை எதிர்நோக்கி அரசாணிக்காய் விதைப் பில் விவசாயிகள் ஈடுபட்டனர். பின் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் பெய்த பருவமழையால் தற்போது அரசாணிக்காய் நன்கு விளைந்து காணப்படுகிறது. நல்ல விளைச்சலுடன் கூடிய அரசாணிக்காயை விவசாயிகள் அறுவடை செய்து, மார்க்கெட்டுக்கு கொண்டு வர ஆரம்பித்துள்ளனர். இதனால் கடந்த ஒரு வாரமாக மார்க்கெட்டுக்கு அரசாணிக்காய் வரத்து அதிகரித்துள்ளது. மார்க்கெட்டில் குவிக்கப்பட்டுள்ள அரசாணிக்காயை பெரும்பாலும் கேரள வியாபாரிகளே வாங்கி செல்கின்றனர். கடந்த ஆகஸ்ட் மாதத்தில் அரசாணிக்காய் வரத்து குறைவாக காணப்பட்டபோது, ஒரு கிலோ ரூ.25 முதல் ரூ.28 வரை விற்பனையானது. தற்போது, வரத்து அதிகரிப்பால் ஒருகிலோ ரூ.14க்கும் (மொத்தவிலை) விற்பனை செய்யப்படுகிறது. சில்லரை விலைக்கு ரூ16க்கு என குறைந்த விலைக்கு விற்பனையாகிறது. இன்னும் ஒரு மாதம் அரசாணிக்காய் வரத்து தொடர்ந்திருக்கும், இதனால் மேலும் விலை குறைய வாய்ப்புள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

## <u>வரப்புகளில் துவரை சாகுபடி</u>

வலங்கைமான்,: வலங்கைமான் பகுதியில் சம்பா நடவு பணி முடிந்த வயல் வரப்புகளிலும் திடல்களிலும் துவரை சாகுபடி செய்தால் வருமானம் பெறு வதோடு, நன்மை செய்யும் பூச்சிகள் அதிகரித்து தீமை செய்யும் பூச்சிகள் குறையும் என வலங்கைமான் வேளாண்மை உதவி இயக்குனர் தேவேந்திரன் தெரிவித்துள்ளார். வலங்கைமான் வட்டாரத்தில் குறுவை சாகுபடி நெல் அறுவடை, சம்பா நடவு பணி தீவிரமாக நடைபெறுகிறது.

சம்பா நடவு பணி முடிந்த வயல் வரப்புகளிலும் திடல்களிலும் துவரை சாகுபடி செய்யலாம். தற்போது வட்டார வேளா ண்மை விரிவாக்க மையங்களில் கோ-6 துவரை ரக விதைகள் விற்பனை செய்யப்படுகிறது. கோ-6 துவரை 140-150 நாள் வயதுடையது. இவை அதிக கிளைகள் உருவாகி காய்கள் அதிகம் காய்த்து குலுங்கும் ரகமாகும். தற்போது விதைகளை வாங்கி வரப்புகளில் நான்கு அடி இடைவெளியில் 2 விதைகள் விதைத்து பராமரித்தால் மழைக்காலத்திற்கு முன் வளர்ந்து விடும். மேலும் வரப்புகளில் உள்ள சத்துக்களை பெற்று நன்கு செழித்து வள ரும். வரப்பு பயிராக வளர்ப்பதால் நன்மை செய் யும் பூச்சிகள், பொறி வண்டு கள், குளவிகள், ஒட்டுண்ணிகள் பெருகி தீமை செய்யும் பூச்சிகள் அழிக்கும். இதில் விவசாயிகள் தங்களுக்கு தேவையான துவரம்பருப்பை உற்பத்தி செய்ய லாம். என வே துவரை விதை களை உடன் பெற்று வரப்பு பயிர் மற்றும் திடல்களில் சாகுபடி செய்து கூடுதல் வருமானம் பெற வலங்கை மான் வேளா ண்மை உதவி இயக்குனர் தே வேந்திரன் தெரிவித்துள்ளார்.

**<u>மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி</u>**

மதுரை, : மதுரை கிழக்கு வட்டார வேளா ண்மைத் துறை சார்பாக, அயிலாங்குடியில் மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சி நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் தனு ஷ்கோடி பயிற்சியை துவக்கி வைத்து கூறுகையில், ‘இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவத்தையும், ரசாயன உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் இடுவதால் மண் வளத்திற்கு ஏற்படும் கேடுகள் குறித்தும், தானியங்கள் மற்றும் காய்கறிகளில் பூச்சி மருந்துகளின் நச்சுத் தன்மையினால் ஏற்படும் தீமைகள் குறித் தும், மண்புழு உரத்தை நிலத்தில் ஈடுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் விளக்கி கூறினார். மேலும், மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் பயிற்சி வேளாண்மை அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>ஈரோடு ஸ்ரீசாய் ஏஜென்சி நிறுவனம் சார்பில் இயற்கை மூலிகை சூப் விற்பனை நிலையம்</u>**

ஈரோடு ஸ்ரீசாய் ஏஜென்சி நிறுவனம் சார்பில் இயற்கை மூலிகை சூப் விற்பனை நிலையம் ஈரோடு திண்டல் (சுரபி நர்சரி அருகில்) தொடங்கப்பட்டு உள்ளது. இதன் திறப்பு விழா நேற்று காலை நடந்தது. விழாவுக்கு உரிமையாளர் தாமோதரன் தலைமை தாங்கி வரவேற்றார். கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணை வேந்தர் கு.ராமசாமி விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார். மேலும், மூலிகை சூப் தயாரிக்கும் எந்திரத்தையும் இயக்கி விற்பனையை தொடங்கி வைத்தார். விற்பனை நிலைய நிர்வாகி டி.யசோதா குத்துவிளக்கு ஏற்றினார். இயற்கை மூலிகை சூப் விற்பனை நிலையத்தில் வல்லாரை, முருங்கை கீரை, செம்பருத்தி பூ, நெல்லிக்காய், பொன்னாங்கண்ணி என்று 16 வகையான சூப் பொடிகள் கிடைக்கும். இதுதவிர இயற்கையான அழகு சாதன பொருட்கள், மூலிகை பூஜை பொருட்கள், சிறுதானிய ஊட்டச்சத்து பானம் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன. திறப்பு விழா சலுகையாக முதல் 3 நாட்களுக்கு ரூ.500–க்கு பொருட்கள் வாங்கும் அனைவருக்கும் ரூ.100 மதிப்பிலான பொருட்கள் இலவசமாக வழங்கப்படும் என்று விற்பனை நிலைய உரிமையாளர் தெரிவித்தார்.

## <u>மதுரை மாவட்டத்தில் பலத்த இடி– மின்னலுடன் பலத்த மழை</u>

மதுரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று மாலை பலத்த மின்னல் மற்றும் இடியுடன் மழை பெய்தது. <u>மழை</u> மதுரையில் நேற்று காலை முதல் மாலை வரை வெயில் சுட்டெரித்தது. இதனால் மக்கள் பெரிதும் அவதிப்பட்டனர். ஆனால் மாலை 6 மணிக்கு மேகங்கள் திரண்டு பலத்த காற்று மற்றும் இடி– மின்னலுடன் மழை துறியது. பின்னர் இரவு 7 மணியளவில் பெய்யத்தொடங்கிய மழை 8.30 மணி வரை பெய்தது. மழைநீர் சாலைகளில் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. வெப்பம் தணிந்து குளிர்ச்சி ஏற்பட்டதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். மழை நின்ற பின்பும் தொடர்ந்து இடி, மின்னல் இருந்தது. கடந்த சில தினங்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்த நிலையில் நேற்று மழை பெய்தது மதுரை மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. உசிலம்பட்டி மற்றும் அலங்காநல்லூர் பகுதியில் சாரல் மழை பெய்தது. திருமங்கலத்தில் இரவு 7 மணியளவில் பலத்த காற்று, இடி–மின்னலுடன் தொடங்கிய மழை 8 மணி வரை பெய்தது. இதனால் திருமங்கலம் பகுதியில் உள்ள அனைத்து தெருக்கள் மற்றும் முக்கிய சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. மழை நின்ற பின்பும் தொடர்ந்து இடி, மின்னல் இடித்தபடியே இருந்தது. பேரையூர் பகுதியில் சுமார் 20 நிமிடம் இடி மின்னலுடன் மழை பெய்தது. <u>மேலூர் </u>மேலூரில் இரவு 9 மணியளவில் இடி, மின்னலுடன் மழை பெய்தது. மேலூர், தும்பைப்பட்டி, நாவினிப்பட்டி, கீழவளவு, வெள்ளளூர், உறங்கான்பட்டி, கோட்டநத்தான்பட்டி, அம்பலக்காரன்பட்டி, கொட்டகுடி, திருவாதவூர், நரசிங்கம்பட்டி, எட்டிமங்களம், கிடாரிபட்டி மற்றும் சுற்று பகுதிகளில் சுமார்

40 நிமிடங்கள் மழை பெய்தது. இதே போல் திருப்பரங்குன்றம், திருநகர், ஹார்விப்பட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமப்புற பகுதிகளில் சுமார் 1½ மணி நேரம் இடி–மின்னலுடன் கூடிய மழை பெய்தது. இதனால் கண்மாய்களில் நீர் மட்டம் உயர்ந்தது. தணக்கன்குளம், வேடர்புளியங்குளம் உள்ளிட்ட பல்வேறு கிராம பகுதிகளில் மழையின் காரணமாக மின் தடை ஏற்பட்டது. இதனால் அந்த பகுதிமக்கள் பெரும் அவதிக்குள்ளாகினர்.

**திருச்செங்கோடு பகுதியில் அதிகபட்சமாக 98 மி.மீட்டர் மழை பதிவு**

நாமக்கல் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு இடி– மின்னலுடன் பரவலாக மழை பெய்தது. பெரும்பாலான இடங்களில் கனமழை பெய்ததால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். நேற்று காலை நிலவரப்படி அதிகபட்சமாக திருச்செங்கோடு பகுதியில் 98 மி.மீட்டர் மழைபதிவாகி இருந்தது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி மாவட்டத்தில் பதிவான மழை அளவு மி.மீட்டரில் வருமாறு:– திருச்செங்கோடு – 98, சேந்தமங்கலம் – 65, ராசிபுரம் – 62, எருமப்பட்டி – 40, பரமத்திவேலூர் – 34, குமாரபாளையம் – 34, மங்களபுரம் – 24, மோகனூர் – 11, புதுச்சத்திரம் – 5, நாமக்கல் – 3. மாவட்டத்தின் மொத்த மழை அளவு 377 மி.மீட்டர் ஆகும். சராசரி மழையளவு 37.7 மி.மீட்டர் என்பது குறிப்பிடதக்கது.

**சிறுதானிய உணவினை பயன்படுத்தினால் ஆரோக்கியமாக வாழலாம் வேளாண் அதிகாரி பேச்சு**

சிறுதானிய உணவினை பயன்படுத்தினால் ஆரோக்கியமாக வாழ லாம் என்று வேளாண் அதிகாரி கூறினார். பாரம்பரிய உணவு திருவிழா பெரம்பலூர் மாவட்ட வேளாண்மைத்துறை சார்பில் பாரம்பரிய உணவுத் திருவிழா நிறைவு நாள் நிகழ்ச்சி பெரம் பலூரில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வேளாண் மை இணை இயக்குனர் வே.அழகிரிசாமி தலைமை தாங்கி பேசியதாவது:– நமது பாரம்பரிய சிறு தானியங்களான கம்பு, சோளம், வரகு, குதிரைவாலி, திணை, சாமை ஆகியவற்றை நம் முன்னோர்கள் பயன் படுத்தியபோது நோயின்றி ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்ந்தனர். நாமும் நமது சந்ததியினரும் சிறுதானிய உணவினை பயன்படுத்தி ஆரோக்கியமாக வாழ வேண்டும். சிறுதானிய சாகுபடி பரப்பு மிகவும் குறைந்து வருகிறது. நாம் வருங்காலத்தில் சிறு தானிய சாகுபடி பரப்பினை அதிகபடுத்தவும், அதிக அள வில் பயன்படுத்தி உடல் ஆரோக்கியத்தை பெறவும், அதிக மகசூல் பெற்று லாப மடையவும் விவசாயிகள் முயற்சி மேற்கொள்ள வேண்டும். மதிப்பு கூட்டிய பொருள் சிறுதானியங்களை மதிப்பு கூட்டிய பொருளாக கம்பு பிஸ்கட், சோளம் பிஸ்கட், கேழ்வரகு பிஸ்கட் தயாரிக்கும் முறை பற்றி தெரிந்து கொண்டு அதை நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் பெரம்பலூர் மாவட் டத்தில் சுமார் 1,100 ஹெக்டர் பரப்பளவில் சிறுதானியங்கள் பயிரிடப்பட்டு வருகிறது. இந்த பரப்பு குறைந்து கொண் டே வருகிறது. சிறுதானியங் கள் தொடர்ந்து பயன்படுத்தும் போது சரிவிகித ஊட்டச் சத்து கிடைப்பதினால் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகிறது. உடல் ஆரோக் கியமாக இருக்கும். மேலும் தற்பொழுது சிறுதானியங்கள் விலை குறைந்தபட்சமாக கிலோ 50 ரூபாய்க்கு விற்கப் படுகிறது. அரசு மானியம் சிறுதானிய பரப்பினை அதிகப்படுத்தும் நோக்கத் தோடு தமிழக அரசு நீர்வள நிலவளத்திட்டத்தின்கீழ் சாமை, வரகு, குதிரைவாலி, திணை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக் டேருக்கு ரூபாய் 4ஆயிரம் மானியமாக இடு பொருட்கள் வழங்கப்படுகிறது. இத்தகைய வாய்ப்புகளை பயன்படுத்தி விவசாயிகள் சிறு தானிய உணவு வகைகளை அதிக அளவில் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

கண்காட்சி

இந்நிகழ்ச்சியில் சிறு தானி யங்கள் பற்றிய கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் சிறுதானிய லட்டு, கம்பு பிஸ்கட், சோளம் பிஸ்கட், கேழ்வரகு பிஸ்கட் போன்ற சிறுதானிய பொருட்கள் பார் வைக்கு வைக்கப்பட்டிருந்தது. அதனுடைய ஊட்டச் சத்து பற்றிய விவரங்கள் அடங்கிய கையேடு அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கப் பட்டது. வரகு, கேழ்வரகு, சோளம், கம்பு, குதிரைவாலி, திணை, சாமை விதைகள் மற்றும் செடிகள் போன்ற சிறுதானிய பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட் டிருந்தன. மேலும், பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர், தலை வர் கவிமணி மற்றும் வேளாண் விஞ்ஞானிகள் ஆனந்தன், பாஸ்கரன், விஜய லெட்சுமி ஆகியோர் சிறு தானியங்களை முறையாக பயன்படுத்துவது குறித்து பேசினர். இந்த விழாவில் பெரம்பலூர், ஆலத்தூர், வேப்பூர், வேப்பந் தட்டை வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், பெண்கள், மாணவ மாணவியர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு பாரம்பரிய உணவுப் பொருட்கள் மற்றும் அவற்றின் பயன்கள் குறித்து தெரிந்து கொண்டனர்.

## <u>காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பரவலாக மழை: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>



காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பரவலாக மழை பெய்வதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

நீர்வரத்து அதிகரிப்பு

தமிழகம் மற்றும் கர்நாடக மாநில காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த 2 வாரங்களுக்கு முன்பு பெய்து வந்த மழை கடந்த 4 நாட்களுக்கு முன்பு நின்றது. இதன் காரணமாக மேட்டூர் அணையின் நீர்வரத்து படிபடியாக குறைந்து வந்து நேற்று முன்தினம் அணைக்கு வினாடிக்கு 5,540 கன அடியாக குறைந்தது. இந்தநிலையில், நேற்று முன்தினம் தமிழக காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மீண்டும் பரவலாக மழை பெய்ய தொடங்கியது. இந்த மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. அதாவது, நேற்று முன்தினம் அணைக்கு வினாடிக்கு 5,540 கன அடிவீதம் வந்து கொண்டிருந்த நீர்வரத்து நேற்று வினாடிக்கு 7,779 கன அடியாக அதிகரித்து உள்ளது.

பாசனத்திற்காக

இருப்பினும் அணையில் இருந்து டெல்டா மற்றும் கால்வாய் பாசனத்திற்காக வினாடிக்கு 18,700 கன அடிவீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருவதால், அணையின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து வருகிறது. இந்த மழை மேலும் தீவிரமடைந்து மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 20 ஆயிரம் கன அடிக்கு மேல் அதிகரித்தால் அணையின் நீர்மட்டம் மீண்டும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. நேற்றைய நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 88.80 அடியாக இருந்தது. மேட்டூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் 46 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது

**<u>கொங்கணாபுரம் வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.35 லட்சத்துக்கு பருத்தி ஏலம்</u>**



திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தி விற்பனையாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் நேற்று பருத்தி ஏலம் நடந்தது. இதில் தர்மபுரி, நாமக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, ஈரோடு ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகள் பருத்தி மூட்டைகளை கொண்டு வந்து ஏலத்தில் கலந்து கொண்டனர். மொத்தம் 2600 பருத்தி மூட்டைகள் ரூ.35 லட்சத்திற்கு ஏலம் போனது. பி.டி.ரக பருத்தி மூட்டைகள் ரூ.3700 முதல் ரூ.4610 வரை ஏலம் சென்றது. இதில் வெளியூர் வியாபாரிகள் பலரும் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர்.

**<u>வைகை அணை நீர்மட்டம் 43 அடியை தாண்டியது</u>**



ஆண்டிப்பட்டி, வைகை அணையின் நீர்மட்டம் கடந்த சில நாட்களாக சீராக உயர்ந்து வருகிறது. அணையின் நீர்மட்டம் நேற்று 43 அடியை தாண்டியது.

வைகை அணை

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே 71 அடி உயர வைகை அணை உள்ளது. இந்த அணைக்கு கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக மூலவைகை ஆற்றில் இருந்து நீர்வரத்து ஏற்படவில்லை. முல்லைப் பெரியாறு அணையில் இருந்து வரும் தண்ணீரை கொண்டே அணையின் நீர்மட்டம் உயர்ந்து உள்ளது. இதன் மூலமே பாசனம் மற்றும் குடிநீருக்கு தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. கடந்த மாதம் முல்லைப் பெரியாறு அணையில் இருந்து வந்த நீரால் வைகை அணையின் நீர்மட்டம் 52 அடியை தாண்டியது. இதனால் பாசனத்திற்கும், குடிநீருக்காகவும் தண்ணீர் திறக்கப்பட்டது. தண்ணீர் திறக்கப்பட்டதன் எதிரொலியாக வைகை அணையின் நீர்மட்டம் கடந்த நில நாட்களுக்கு முன்பு 40 அடியாக குறைந்தது.

43 அடியாக உயர்வு

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக பெய்த மழை மற்றும் முல்லைப் பெரியாற்றில் இருந்து வரும் தண்ணீரின் அளவு அதிகரிப்பு போன்ற காரணங்களால் வைகை அணையின் நீர்மட்டம் கடந்த 3 நாட்களில் 3 அடி உயர்ந்து உள்ளது. நேற்று அணின் நீர்மட்டம் 43.67 அடியாக காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 1,709 கன அடி நீர்வரத்து இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 960 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. அணையில் மொத்தம் ஆயிரத்து 269 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் நேற்று 128.50 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 399 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 1,644

கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் மொத்த நீர்இருப்பு 4,374 மில்லியன் கனஅடியாக காணப்பட்டது.